## பக்கவாதத்தை குணப்படுத்த

# சோனா த்ரோம்போலிசிஸ் அதிநவீன சிகிச்சை

## கே.எம்.சி.எச்.ல் அறிமுகம்




**அதிநவீன சிகிச்சையான சோனா த்ரோம்போலிசிஸ் சிகிச்சை மூலம் பக்கவாதத்தில் இருந்து குணமடைந்த நோயாளியுடன் கே.எம்.சி.எச். தலைவர் நல்லா ஜி.பழனிச்சாமி, நரம்பியல் சிகிச்சை துறையின் டாக்டர் விஜயன் ஆகியோர் உள்ளனர்.**

**கோவை, அக்.29:** கே.எம்.சி.எச்.ல் பக்கவாத நோய்க்கு சோனா த்ரோம் போலிசிஸ் எனும் அதிநவீன சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன்பு இந்த நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவம னையில் அனுமதிக்கப் பட்ட நோயாளி தற்போது பூரணமாக குணமடைந் துள்ளார்.

இது குறித்து கே.எம்.சி.எச். தலைவர் நல்லா ஜி.பழனிச்சாமி, நரம் பியல் சிகிச்சை துறையின் டாக்டர் விஜயன் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:

மூளையில் ஏதாவது ஒரு பகுதியில் ரத்தக்குழாய் அடைப்பு ஏற்படுவதுதான் பக்கவாதம். மாரடைப்பு போல இதை மூளை அடைப்பு எனக் கூறலாம். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இதுபோன்ற ரத்த ஓட்டம் தடைப்பட்ட இஸ்கீமிக் ஸ்ட்ரோக்கு களுக்கு சிகிச்சை என்பது கிடையாது.

ஆனால், தற்போது மருந்துகளால் மாரடைப்பு ரத்தக்கட்டி அடைப்புகளை கரைத்து விடுவது போல உடனடியாக மூளை அடைப்பு ரத்தக் கட்டிகளையும் கரைத்துவிடலாம். ரத்த ஓட்ட அடைப்பு தாக்கிய 6 மணி நேரத்துக்குள் கே.எம்.சி.எச். மருத்துவம னைக்கு வரும் நோயாளி களுக்கு ஸ்ட்ரோக் த்ரோம் போலிசிஸ் சிகிச்சை மூலம் குணமாக்க முடியும்.

டிஸ்யூ பிளாஸ்மி னோஜென் ஆக்டிவேட்டர் எனும் மருந்து மூலம் ரத் தக்கட்டி கரைக்கப்படு கிறது. உலகம் முழுவதும் இந்த சிகிச்சை முறை தான் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், அறிமுகமாகி சில ஆண்டுகளே ஆன சோனா த்ரோம்போலிசிஸ் எனும் நவீன சிகிச்சை பிரபலமாகி உள்ளது.

கடந்த 15 நாட்களுக்கு முன்பு அன்னூரைச் சேர்ந்த பொன்னுசாமி என்பவர் ஸ்ட்ரோக்கால் பாதிக்கப் பட்டதும் ஒன்றரை மணி நேரத்துக்கு உள்ளாக கே.எம்.சி.எச்.மருத்துவம னைக்கு வந்தார். இடது பக்க கை, கால் இயக்க முடி யவில்லை. சி.டி.ஸ்கேன் எடுக்கப்பட்டது. மூளை யின் வலது பகுதியில் பிரதான ரத்தக் குழாயில் அடைப்பு இருப்பதும், டிரான்ஸ் கிரேனியல் டாப்ளர் பரிசோதனையில் அல்ட்ரா சவுண்டு அலை கள் மூலமும் ரத்த ஓட்ட தடை கண்டறியப்பட்டது.

துல்லியமாக ரத்தக் கட்டியை அறிந்ததும் அல்ட்ரா சவுண்டு அலை களுடன் டிஸ்யூ பிளாஸ் மினோஜன் ஆக்டிவேட்டர் மருந்தை செலுத்துவ துமான இந்த சிகிச்சை முறை சோனா த்ரோம்போ லிசிஸ் எனப்படுகிறது. இதில், பயன்படுத்தப்படும் டி.சி.டி.எனும் டாப்ளர் துல்லியமான சிகிச்சைக்கு வழி வகுக்கிறது. ஒரு மணி நேரம் தொடர்ந்து அளித்த சிகிச்சையால் இந்த நோ யாளி இடது பக்க கை, கால் அசைவுகளை தொடர முடிந்தது. தற்போது அந்த நோயாளி பூரணமாக குணமடைந்துள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.